
அறிவுசார் சொத்துரிமையின்
வர்த்தகத் தொடர்கள்

இலக்கம் : 1



இலக்கினை ஏற்படுத்தல்

சிறிய மற்றும் நடுத்தர தொழிற்துறை சார்ந்தோருக்கு வர்த்தக சின்னங்கள் பற்றிய ஓர் அறிமுகம்

WIPO
WORLD INTELLECTUAL PROPERTY ORGANIZATION

"வியாபாரத்திற்கான நுண்ணறிவாளர் உடைமை" பிரசுரங்களின் தொடர்:

1. **இலக்கினை ஏற்படுத்தல்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில் முயற்சி களுக்கான வியாபாரச் சின்னத்தின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல: 900.

2. **பார்வைக்கு நேர்த்தியான:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளுக் கான கைத்தொழில் வடிவமைப்பின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல: 498.

3. **எதிர்காலத்தின் உருவாக்கம்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிக ளுக்கான காப்புரிமைகளின் அறிமுகம். உ.நு.உ.ஒ பிரசுர இல: 917.

4. **ஆக்கத்திறன் தோற்றம்:** சிறிய மற்றும் மத்திய அளவான தொழில்முயற்சிகளு க்கான பதிப்புரிமையின் அறிமுகம். உ.நு.உ.ஒ. பிரசுர இல: 918 (எதிர்பார்க்கப்படுகின்றது)

உ.நு.உ.ஒ. (WIPO) மின் புத்தகசாலையில (e-bookshop) www.wipo.int/ebookshop இல் சகல பிரசுரங்களும் கிடைக்கும்.

கோரிக்கை கைவிடல்: இவ்வழிகாட்டியில் அடங்கியுள்ள தகவல், தொழில்சார் சட்ட மதியுரைக்கு பதிலீடாகாது. இதன் பிரதான நோக்கமானது இவ்விடய அடிப்படை தகவலை அளிப்பதற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

உலக நுண்ணறிவாளர் உடைமை ஒன்றியத்தின் (உ.நு.உ.ஒ) முன்பு தெளிவாய் குறிப்பிட்ட அனுமதியுடன் இந்த பிரசுரமானது மொழி பெயர்க்கப்பட்டு மீள் அளிக்கப்பட்டுகின்றது, பதிப்புரிமை உரிமையாளரின் மூல ஆங்கில கூற்றானது www.wipo.int/sme/en/documents/guides/ இல் உள்ளது. எனவே, உ.நு.உ.ஒ. ஆனது, மொழிபெயர்க்கப்பட்ட கூற்றின் பிரசுரத்தின் செம்மை அல்லது திருத்தத்தன்மைக்கும் பொறுப்பாளியோ அல்லது கடமைப்பட்டவராக இருக்கமாட்டாது, ஏனெனில் பொறுப்போ அல்லது கடமையோ இலங்கை சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்களிலேயே (செயல்திட்ட சி.ந.தொ.மு.அ.) முழுமையாக தங்கியிருப்பதினாலாகும்.

"சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தியாளர்கள் (செயல்திட்ட சி.ந.தொ. மு.அ.) (பதிப்புரிமை 2010)" உ.நு.உ.ஒ. ஆனது (2006) மூல ஆங்கில மொழி கூற்றின் பதிப்புரிமைக்கு உரிமையாளியாக உள்ளது. இப்பிரசுரத்தின் எப்பகுதியினையாகிலும் எவ் வடிவிலும் அல்லது எவ்விதத்திலும், பதிப்புரிமை உரிமையாளரின் எழுத்துமூல அனுமதி யின்றி மின்னணு மூலமோ அல்லது பொறிவழி மூலமோ மீள் அளித்தலோ அல்லது பரப்புதலோ சட்டத்தால் அனுமதிக்கப்பட்டவாறாக அன்றி ஆகாது.

பதிப்புரை உரிமையாளரிடமிருந்து எழுத்துமூல அனுமதியின்றி, இப்பிரசுரத்தின் எப்பகுதி யையும் சட்டத்தினால் அனுமதிக்கப்பட்டவாறன்றி மின்னணு சார்பாகவோ அல்லது பொறி முறையாகவோ அல்லது எவ்வகையாகவோ அல்லது எவ்வடிவமாகவோ பதிப்புரிமை யாளரின் எழுத்துமூல அனுமதியின்றி மீள் தயாரித்தல் ஆகாது.

அறிமுகம்

“வர்த்தகத்திற்கான அறிவுசார் சொத்துக்கள்“ வழிகாட்டல்கள் தொடரின் முதலாவது வழிகாட்டலே இதுவாகும். இது வர்த்தகத்திலுள்ள பல்லேறு பங்குதாரர்களுக்கு (உற்பத்தியாளர், உரிமையாளர், முகாமையாளர், நிறைவேற்று பணிப்பாளர், முதலீட்டாளர் மற்றும் வர்த்தக ஆலோசனையாளர்) சாத்தியமான வர்த்தக இலச்சினை முகாமைத்துவத்தின் முக்கியத்து வத்தினை விளக்கும்.

வர்த்தகநாம கட்டமைப்பு திட்டமிடலின் முக்கிய பகுதியாக வர்த்தகஇலச்சினை முகாமைத்துவம் இருக்க வேண்டும். அதிக கூட்டமுள்ள சந்தையொன்றில் வர்த்தக இலச்சினையானது மிகவும் துல்லியமாக, தெளிவாக வெளிப்பட்டு சாதகமான பலனை தரலாம். புதிய சந்தைகளின் தோற்றம் மற்றும் இணையத்தின் வளர்ச்சி என்பன பெறுமதியான வர்த்தக இலச்சினைகள் மற்றும் புதிய வர்த்தக மாதிரிகளின் தயாரிப்பை அதிகரித்துள்ளதுடன் நிறுவனம் தெளிவாக வெளிப்பட்டு தெரிவதையும் உறுதிசெய்யும். அவ்வாறே வர்த்தக இலச்சினை உரிமையினை பாதுகாப்பதிலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு இல்லாவிடின் அவை பிறரால் துஸ்பிரயோகம் செய்யப்படும்.

இக்கையேடு வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள பல்வேறு தரப்பினருக்கு உதவும் முகமாக தயாரிக்கப்பட்டுள்ளது. இது சிறிய மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களுக்கு கீழுள்ள காரணிகளை தெளிவுபடுத்தும்.

பொருளடக்கம்

Page

1. வர்த்தக சின்னங்கள் 3

2. இலச்சினைகளை பாதுகாத்தல் 6

3. சின்னங்களின் வகைகள் 15

4. சின்னங்களை உபயோகித்தல 17

5. வர்த்தக சின்னங்களை பலப்படுத்தல் 21

1. வர்த்தக இலச்சினைகள்

வர்த்தக இலச்சினை என்றால் என்ன?

வர்த்தக சந்தையில் ஒரு தொழிற்துறையை சேர்ந்தவரின் உற்பத்தியை மற்றயவர்களிடமிருந்து அல்லது மற்றை உற்பத்திகளில் இருந்து வேறுபடுத்தி காண்பிக்கும் இலகுவாக அடையா ளம் காண உதவும் ஓர் குறியீடு வர்த்தக இலச்சினை ஆகும்.

ஏதேனும் குறிப்பிட்ட **சொல், எழுத்து, இலக்கம், வரைபு, படம், அமைப்பு, நிறம், இலச்சினை வகை, லேபள் அல்லது அவற்றின் கூட்டு** என்பன பண்டங்களையும் சேவைகளையும் வேறுபடுத்த இலச்சினையாக உபயோகிக்கப்படுகிறது. அநேக நாடுகளில் நிறுவனங்களின் சுலோகங்கள், வர்த் தக சுலோகம், மற்றும் புத்தகங்கள், திரைப்பட தலைப்புகளும் சின்னங்களாக கருதப்படுகின்றன. நிறங்கள், முப்பரிமாண அடையாளங்கள், (பொதி முறைகள்) நடமாடும் புகைப்படங்கள், ஒலிகள், வாசைன, போன்ற உத்தியோகபற்றில்லாத சின்னங்களை பதிவு செய்ய அனுமதிக்கின்றன. எவ்வாறாயினும் அநேக நாடுகள் இலச்சினையாக பதிவு செய்யக்கூடியவைகளுக்கு ஓர் எல்லையை வகுத்துள்ளன. பொதுவாக அடையாளங்களை நிர்மாணம் ஒன்றில் உபயோகிக்கலாம்.

வர்த்தக இலச்சினை ஒன்றின் பிரதான அம்சம் அது அறியப்படகூடியதாக இருப்பதாகும். அதனால் அதை இலகுவாக அடையாளம் காணவும், மற்றவைகளில் இருந்து வேறுபட்டு அறியவும் உதவும். இலச்சினை ஒன்றை தெரிவு செய்வது சிலசமயம் சவாலானதாக இருக்கலாம்.
சுலோகம், விளம்பர சுலோகம் அல்லது உற்பத்தி வடிவம் என்பவற்றை நிர்மாணிக்கும் போது நீங்களோ அல்லது உங்கள் ஊழியர்களோ அதை முக்கியமானதாக கருதாமல் இருக்கலாம், எனினும் உங்களுக்கு ஒத்த வடிவம் அல்லது சுலோகத்தினை கொண்டுள்ள உங்கள் போட்டியாளர் அவரின் உரிமையினை ஆக்கிரமிப்பு அல்லது துஸ்பிரயோகம் செய்வதாக உங்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்.

உதாரணம்:

சொல்:

YAHOO!

Courtesy: Yahoo!

இலச்சினை வகை



பென்குயின் பதிப்பகத்தின் அனுமதியுடன் மீள்உற்பத்தி செய்யப்படுகிறது

எழுத்துக்கள் மற்றும் வர்த்தக இலச்சினைகளின் கூட்டில்



' 1986 இயற்கைக்கான உலகளாவிய நிதியம் முன்னர் உலக வனஜீவன நிதியம்
fi WWF பதிவு செய்யப்பட்ட வர்த்தக சின்ன உரிமையாளர்

முப்பரிமாண வடிவம் (உற்பத்தி வடிவம்):



Tobleronefi '1986 ஆம் கிராப்ட் புட்ஸ் குழுமத்தினால் பதிவு செய்யப்பட்ட வர்த்தகசின்னம்

வர்த்தக இலச்சினைகள் எதற்காக?

ஒரு இலச்சினையின் நோக்கம் பாவனையாளர்கள் ஒரு குறிப்பிட்ட நிறுவனத்தின் பொருள் (பொருள், சேவை) போட்டியாளரின் அதே போன்ற பொருளிலிருந்து **பிரித்து அறிய உதவும்.** ஒரு குறிப்பிட்ட பொருளால் திருப்தியடைந்த பாவனையாளர் அதே பொருளை திரும்ப, திரும்ப வருங்காலத்தில் உபயோகிப்பர். இதற்கு பொருட்களையும், அதே போன்று உள்ள வேறு பொருட்க ளையும் பிரித்தறிய தெரிந்திருக்க வேண்டும்.

நிறுவனங்கள் தாங்களையும் தங்களது பொருட்களையும் போட்டியாளரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்கு இலச்சினைகள் இயலச் செய்வதோடு நிறுவனங்கள் **சந்தைப்படுத்துவதற்கு** பாவனையாளர்கள் பொருட்களின் **நற்பெயர்களை பாதுகாக்க** முக்கிய பயனளிக்கிறது. நிறுவனத்தின் நற்கீர்த்தி நிறுவனத்தின் **நற்பெயரை** மிகைப்படுத்த அடிப்படையாக நிலை நாட்டுகிறது. பாவனையாளர்கள் தாங்கள் விரும்பிய சிறப்பு அம்சங்களைக் கொண்ட இலச்சினையுள்ள பொருட்களின் மீது **விஷேச ஆசை** கொள்வார்கள்.

தங்களுடைய பொருட்களை தரம் உயர்த்தி முதலீடு செய்வதற்கு இலச்சினைகள் ஊக்கமளிக்கின்றன.

இலச்சினைகளின் பெறுமதி

கவனமாக நன்கு தேர்ச்சி பெற்ற இலச்சினை அதிகமான நிறுவனங்களுக்கு **பெறுமதியான வியாபார சொத்தாகும்**. சிலவற்றுக்கு இது தங்கள் சொந்தமாக இருக்கும் பொருட்களுக்கு பெறுமதியான சொத்தாகும். மதிப்பீட்டு கணக்கின்படி உலகில் பிரசித்தி பெற்ற இலச்சினைகள் உதாரணமாக Coca -Cola அல்லது IBM மதிப்பு 50 டாலர்களுக்கும் அதிகமாகும். ஏனெனில் பாவனையாளர்கள் இலச்சினைகளை அதன் நன்மதிப்பு, இலச்சினைகளோடு சம்பந்தப்பட்ட எதிர்ப்பார்க் கும் தரம், அவர்கள் எதிர்ப்பார்ப்புக்களை எதிர்கொள்ளும் இலட்சினை உள்ள பொருட்களுக்கு அதிக விலை கொடுத்து வாங்க விரும்புகின்றனர். அதனால் நன்மதிப்புள்ள இலட்சினை சொந்தமாக இருப்பது ஒரு நிறுவனத்திற்கு போட்டிக்கு ஏற்றதாகும்.

Courtesy: IBM Deutschland GmbH

உங்கள் நிறுவனம் ஏன் அதன் இலச்சினையை பாதுகாக்க வேண்டும்?

அதிகமான வியாபாரங்களை போட்டியாள ரிடமிருந்து பிரித்தறிய இலச்சினைகளை உபயோகிக்கும் முக்கியத்துவத்தை உணர் ந்திருந்தாலும் அவைகளை **பதிவுசெய்து** பாதுகாக்க வேண்டுமென்பதை உணர்வதில்லை.

பொருத்தமான இலச்சினை சட்டப்படி பதிவு செய்தல் உங்களுடைய நிறுவனத்திற்கு மற்றவர்கள் **அதேபோன்று பொருட்களை அதற்கு ஒப்பான இலச்சினையை பாவிப்பதை தடுக்கும்.** இலச்சினை பதிவு செய்யப்படாவிட்டால் உங்கள் முதலீடு செய்வது வீணாகிவிடும். ஏனெனில் போட்டி நிறுவனங்களை அதேபோன்ற பொருட்களுக்கு அதேபோன் இலச்சினைகளை உபயோகிப்பர். போட்டியாளர் இப்படி செய்வதால் பாவனையாளர் உங்களுடைய பொருட்களென்று எண்ணி ஏமாற்றப்படுவார். இது உங்களுடைய நிறுவனத்தின் இலாபத்தை குறைப்பதுடன் உங்கள் பாவனையாளர்களை ஏமாற்றும். அத்துடன் போட்டியாளரின் பொருட்கள் தரக்குறைவாக இருந்தால் உங்களது நிறுவனத்தின் பெயருக்கு அபகீர்த்தியையும் ஏற்படுத்தும்.

இலச்சினையின் பெறுமதியும், சந்தையில் பொருளுக்கு வெற்றியும் கிடைப்பதற்கு அது பொருத்தமான சந்தையில் பதிவு செய்யப்பட்டதா என்பதை உறுதிசெய்ய வேண்டும்.

பதிவு செய்யப்பட்ட இலச்சினை மற்ற நிறுவனங்களுக்கு அனுமதிக்கலாம். உங்கள் நிறுவனம் மேலதிகமான வருமானத்தைப் பெற அல்லது **வர்த்தக கூட்டிணைப்பு ஒப்பந்தத்துக்காக.** பாவனையாளர்களிடம் நற்பெயர் பெற்ற பதிவுசெய்யப்பட்ட இலச்சினை பண உதவி செய்யும் ஸ்தாபனங்களிலிருந்து நிதியுதவி பெற உபயோகிக்கப்படலாம். வியாபார வெற்றிக்கு உள்ள இலச்சினையை இந்த ஸ்தாபனங்கள் அறிந்திருந்தன.

இலச்சினைகள்

- பாவனையாளர்கள் பொருட்களினிடையே உள்ள வேறுபாடுகளை உறுதிபடுத்தல்.
- நிறுவனங்கள் தங்கள் பொருட்களை வித்தியாசங்களை எடுத்துக்காட்ட உதவுகிறது.
- சந்தைப்படுத்தும் கருவியாகவும் வியாபாரத்தில் கீர்த்தி பெறவும்
- பதிவு செய்யப்பட்டு உரிமை பங்கு தொகையிலிருந்து நேரடியாக வருமானம் பெறுவது
- Franchise உடன்படிக்கைக்கு தாக்கமான முடிவு செய்யும்
- பெறுமதியான வியாபாரச் சொத்து
- பொருட்களின் தரத்தை சீர்படுத்தி தொடர்ந்து செயலாற்ற ஊக்கமளிக்கிறது.
- நிதியுதவி பெற உபயோகமாகிறது.

2. இலச்சினையை பாதுகாத்தல்.

உங்கள் நிறுவனம் எப்படி அதன் இலச்சினையை பாதுகாக்கும்?

இலச்சினை **பாதுகாப்பு பதிவு** மூலம் அல்லது சில நாடுகளில் பாவனை மூலம் பெறப்படும். பாவனை மூலம் இலச்சினை பாதுகாக்கப்பட்டாலும் இலச்சினையை அனுமதிப்பத்திரம் தேசிய இலச்சினை காரியாலயத்திலிருந்து பெறப்பட்டு நிரப்பப்பட்டு பதிவு செய்ய வேண்டும். (சில இலச்சினை காரியாலயங்கள் on-line அனுமதி பெற வசதியளிக்கிறது. அதேபோன்று அன்று சிக்கலான இலச்சினைகள் இருக்கும் போது இலச்சினையை பதிவு செய்வது உறுதியான பாதுகாப்பளிக்கிறது. இலச்சினையை பதிவுசெய்ய இலச்சினை முகவரின் சேவை மிகவும் முக்கியம். (சில நாடுகளில் கட்டாயம்)

உங்கள் நிறுவனத்தின் இலச்சினை பதிவு செய்தல் போதுமானதா?

வியாபாரத்தையும் **வியாபார பெயரையும்** பதிவுசெய்தால் இந்த பெயர்தானே இலச்சினையாக பாதுகாக்கப்படும் என்று பலர் விரும்புகின்றனர். இது சாதாரண தவறான அபிப்பிராயம் வியாபார பெயர்களுக்கும் வியாபார இலச்சினைக்குமுள்ள வித்தியாசத்தை புரிந்து கொள்வது அவசியம்.

வியாபாரப் பெயராவது உங்கள் வணிக நிறுவனத்தின் முழுப்பெயராகும். Blackmark International Ltd. இது உங்களது நிறுவனத்தை **அடையாளங் காட்டுகிறது**. இது Ltd Inc. அல்லது வேறு சுருக்குமுறை நிறுவனத்தின் சட்ட முறையை காட்டுகிறது.

இலச்சினையானது உங்கள் நிறுவனத்தின் **பொருட்களை வேறுபடுத்தி காட்டுகிறது.** ஒரு நிறுவனத்துக்கு பலவகையான இலச்சினைகள் இருக்கலாம். உதாரணமாக Blackmark International Ltd. அதன் பொருட்களில் ஒன்றை Blackmark என்றும் இன்னொன்றை Real Mark என்றும் விற்பனை செய்யலாம். நிறுவனங்கள் அவர் களது எல்லா பொருட்களை அறிந்துகொள்ள பிரத்தியேகமான பொருள்கள் அல்லது ஒரு தனித்தன்மையுள்ள பொருளை அறிய பிரத்தியேகமான இலச்சினையை உபயோகிக் கலாம். சில நிறுவனங்கள் அவர்களது வியாபார பெயரை அல்லது அதன் ஒரு பகுதியை இலச்சினையாக பாவித்து வியாபார இலச்சினையாக செய்வர்.

வியாபார இலச்சினை பதிவு செய்ய விண்ணப்பிக்க யாருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது?

பொதுவாக வியாபார இலச்சினையை உபயோகிக்க விரும்பும் யாரும் அல்லது மூன்றாம் நபரிற்கு உபயோகிக்க அனுமதி அளிக்கும்போதும் கட்சியாளர் பதிவுக்கு விண்ணப்பிக்கலாம். அது தனிப்பட்ட நபர் அல்லது ஒரு சட்ட அலகாகவும் இருக்கலாம்.

ஒரு நிறுவனத்தின் வியாபார இலச்சினைகளை பதிவு செய்வது கட்டாயமா?

இது கட்டாயமாக இல்லாமலிருந்தாலும் பதிவு செய்தல், விஷேச உரிமைகள் கொடுத்து அதிகாரமில்லாமல் இலச்சினை பாவிப்பதை தடைசெய்யும்.

ஒரு விண்ணப்பத்தை நிராகரிப்பதற்கு முக்கிய காரணங்கள் என்ன?

பதிவுக்கு விண்ணப்பிக்கும் போது எந்த வகையான குறியீடுகள் பதிவுக்கு ஏற்றுக கொள்ளப்படாது என்று அறிந்து கொள்வது உதவியாயிருக்கும். பதிவுக்கான விண்ணப்பங்களை வழக்கமாக நிராகரிப்படுவதற்கு தனிப்பட்ட ஆதாரம் (Absolute Grounds) பின்வரும் நிகழ்வுகளில்,

- **பொதுவான நிபந்தனை -** உதாரணமாக உங்களுடைய நிறுவனம் கதிரைகள் விற்பதற்காக Chairs என்று இலச்சினையை பதிவுசெய்ய எண்ணினால் அது நிராகரிக்கப்படும். ஏனெனில் அது அந்தப்பொருளின் பெயர் (Generic Term)
- **விளக்க நிபந்தனை** - இது பொருளை விபரிக்க உபயோகிக்கப்படும். சொக்லேட்டை சந்தைப்படுத்த Sweet என்று இலச்சினை உபயோகித்தால் அது ஒரு வகை சொக்லேட் தயாரிப்பாளருக்கு பிரத்தியேகமாக sweet என்று சந்தைப்படுத்த அனுமதியளிப்பது நேர்மையற்றதாகும். அதே போல் புகழக்கூடிய பதங்கள் Rapid Best Classic Innovation போன்றவை ஒரு குறிப்பிட்ட இலச்சினை இல்லாவிட்டால் நிராகரிக்கப்படும். அப்படிப்பட்ட வேலையில் மறுப்பு ஒன்றை சேர்த்துக்கொள்ள வேண்டும். அந்த இலச்சினைக்கு பிரத்தியேகங்கள் இல்லை என்று தெளிவுபடுத்த வேண்டும்.
- **ஏமாற்றக்கூடிய வியாபார இலச்சினைகள்:** இந்த இலச்சினைகள் பாவனையாளர்களை ஏமாற்ற அதன் தரம் அதன் மூலப்பொருட்களை வழி தவற செய்யும். மாஜரீன் விற்பனை செய்யும் போது ஊழற என்று இருந்தால் அதை நிராகரிக்க நேரிடும். ஏனெனில் பாவனையாளர்கள் அதை டீரடடள என்று தவறாக நினைப்பார்கள்.
- **பொதுமக்களின் நெறிக்கு மாறான இலச்சினைகள்:** சொற்களும், படங்களும் நெறியையும் சமயங்களையும் பங்கப்படுத்துமானால் இலச்சினைகளை பதிவு செய்ய அனுமதிக்கப்படமாட்டாது.
- **கொடிகள், உத்தியோகபூர்வமான குறிகள்** அரசாங்க, சர்வதேச குழுக்களின் சின்னங்கள், சர்வதேச நியதிகள் சம்பந்தப்பட்டது பதிவு செய்வதிலிருந்து தவிர்க்கப்படும்.

முந்திய வியாபார இலச்சினை உரிமைகளுடன் இலச்சினை சர்ச்சையாயிருந்தால் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். ஒரே வகையான பொருளுக்கு ஒரே மாதிரியான இரு இலச்சினைகளிருந்தால் பாவனையாளர்களுக்கு தடுமாற்றம் ஏற்படலாம். சில வியாபார இலச்சினை காரியாலயங்கள் தற்போதுள்ள முரண்பாடான இலச்சினைகளையும், பிரசித்திபெற்ற பதிவுசெய்யப்படாத

இலச்சினைகளையும் சரியா என்று பார்ப்பர். ஆனால் மற்றும் பல இலச்சினை வெளியிட்டவுடன் மூன்றாம் நபரால் ஆட்சேபிக்கப்பட்டவை பரிசீலனை செய்யப படும். எப்படியாயினும் இலச்சினை ஒத்தி ருந்தாலும் அதே போன்று பொருட்களுக்கு அது நிராகரித்து அல்லது ரத்துச் செய்யப்படும்.

தற்போதுள்ள இலச்சினைகளுக்கு முரண்பா டாக ஒத்திருக்கும் இலச்சினைகளை உபயோகிப்பதை தவிர்ப்பது புத்திசாலித தனமாகும்.

ஒரு இலட்சினையை தேர்ந்தெடுக்கும் போது அல்லது உருவாக்கும் போது மனதில் எதை வைக்கவேண்டும்?

ஒரு தகுதியான வியாபார இலச்சினையை தேர்ந்தெடுப்பது அல்லது உருவாக்குவது கஷ்டமான படியாகும். ஏனெனில் உங்கள் வியாபாரத்தை பலப்படுத்த இது முக்கியமான அம்சமாகும். உங்களுடைய பொருட்களுக்கு ஏற்ற இலச்சினை என்ன? இதற்கு கட்டாயமான சட்டம் இல்லை. பின்வரும் ஐந்து பரிசீலனை உபயோகமாக இருக்கும்.

உங்கள் வியாபார இலச்சினையை தேர்ந்தெடுக்க ஐந்து பொயிண்ட் பரிசீலனை பட்டியல்.

- உங்கள் விருப்பத்திற்குரிய இலச்சினை பதிவு செய்வதற்கு எல்லா **சட்டக் கோரிக் கைகளையும்** பூர்த்தி செய்துள்ளதா என்பதை பரிசீலனை செய்யவும். (7ம் பக்கத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக் கப்படும் காரணங்களை பார்க்கவும்.)
- உங்களுடைய இலச்சினை தற்போதுள்ள அதேபோன்று இலச்சினைகளை அல்லது குழப்பந்தரக்கூடியதாக இல்லாமலிருக்க **சோதனை** செய்து கொள்ளுங்கள்.
- இலச்சினை **இலேசாக வாசிக்க, எழுத, ஞாபகத்தில் வைத்துக்கொள்ள** இருப்ப தோடு எல்லாவகையான விளம்பர சாதனங்களுக்கும் ஏற்றதாக இருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- இலச்சினை உங்கள் பாஷையில் அல்லது ஏற்றுமதி சந்தைக்குள்ள பாஷையில் **தேவையற்ற சொற்கள்** இல்லாமலிருக்க உறுதிப்படுத்தவும்.
- **ஆட்சி பகுதி பெயர் (Domain Name) -** பதிவுக்கு கிடைக்கக்கூடியதா என்பதை பரிசீலனை செய்து கொள்ளவும். (வியாபார இலச்சி னையையும், ஆட்சி பகுதி பெயரிற்கும் உள்ள உறவை 19ம் பக்கம் பார்க்கவும்.

உங்களுடைய இலச்சினைக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சொற்கள் தேர்ந்தெடுக்கும் போது சிலவகையான சொற்களை தேர்ந்தெடுக்க கவனம் எடுக்க வேண்டும்.

- **கற்பனை சொற்கள்** - இவைகள் உண்மையான கருத்தில்லாமல் புதிதாக கற்பளை செய்யப்பட்ட சொற்கள் ஊழனென றழசனள இலேசாக பாதுகாக்கப்படும். ஏனெனில் இவை தெளிவானவை. ஆனால் பாவனையாளர்கள் இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள கடினமாக இருக்கும். தங்கள் பொருட்களை விளம்பரம் செய்ய.

உதாரணமாக:-

Kodak, Eastmark Kodak Company இன் பதிவு செய்யப்பட்ட வியாபார இலச்சினை.

Kodak is a Registered Trademark of Eastman Kodak Company.

Courtesy: Eastman Kodak Company

- **தன்னிச்சையான வர்த்தக சின்னம்** - இவை விளம்பரம் செய்யும் பொருட்களுக்கு சம்பந்தமில்லாத கருத்துடைய சொற்கள். இந்த வகையான குறிகள் பாதுகாக்க இலேசாக இருப்பதோடு பாவனையாளரின் மனதில் குறிகளுக்குரிய பொருட்களுக்கும் உள்ள சம்பந்தத்தை உருவாக்க பலத்த விளம்பரம் தேவைப்படும்.

உதாரணம்:- Elephant என்ற இலச்சினை நடமாடும் தொலைபேசி சந்தைப் படுத்துவதற்கு.

- **அறிவுறுத்தும் வர்த்தக சின்னம்.** பொருளின் இயற் பண்பை குறிக்கும் குறிகள். குறிப்பாக கூறும் இந்த இலச்சினைகள் விளம்பரமாக காட்டப் படுகிறது. இதிலுள்ள சிறிய கஷ்டம் சில நாடுகள் இந்த குறிகளை அதிகமாக விளக்குவதாகவே கருதுகின்றன.

உதாரணம்:- மின்சார ஹீட்டருக்கு Sunny என்ற வியாபார இலச்சினை அந்த பொருள் உஷ்ணத்தை பரப்பி உங்கள் வீட்டை உஷ்ணமாக்கும் என்ற கருத்தைக் கொடுக்கும். இது அதிகமான விபரிப்பு என்று எண்ணி இலச்சினை பதிவாளர் இதனை பதிவு செய்யமாட்டார்கள்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் குறியை தற்போது நடைமுறையிலிருக்கும் குறியை பாவனை செய்வதை தடுப்பது முக்கியம். போட்டியாளரது சிறிய அளவான திருத்தப்பட்ட குறி அல்லது தவறாக எழுத்து கூட்டப்பட்டுள்ள குறிகளை பதிவுசெய்யப்படுவது சாத்தியமில்லை.

உதாரணம்:- Easywear இளைஞர்களுக்கு (Teenage) உடைகள் என்பதற்கு பதிவுசெய்யப்பட்ட இலச்சினை. அதே அல்லது அதேபோன்ற பொருட்களை Easywear என்று உபயோகிப்பது புத்திசாலித்தனமல்ல. ஏனெனில் தற்போதுள்ள இலச்சினையை தடுமாறச் செய்யும் என்பதால் பதிவு செய்யப்படுவது சாத்தியப்படாது.

ஒரு இலச்சினையை பதிவு செய்வது - படிப்படியாக

விண்ணப்பதாரர்.

முதற்படியாக பூரணப்படுத்தப்பட்ட வியாபார இலச்சினை விண்ணப்பப்படிவத்தை அனுப்பி அல்லது கையளிக்க வேண்டும். இதில் உங்கள் நிறுவனத்தின் விபரங்கள், குறியீட்டின் வரைபடம் (பிரத்தியேகமான முறை தேவைப்படும்), பொருட்கள் சேவைகள் எந்த தரத்தில் உங்கள் வியாபாரம் வியாபார இலச்சினை பெற வேண்டும் உள்ளடங்க வேண்டும் உரிய கட்டணத்தை செலுத்த வேண்டும்.

சில வியாபார இலச்சினை காரியாலயங்கள் (உதாரணமாக: ஐக்கிய அமெரிக்கா, கனடா) இலச்சினையை உங்கள் நிறுவனம் உபயோகிப்பதற்குள்ள ருசு அல்லது உறுதி மொழியை வேண்டிகொள்ளும். சம்பந்தப்பட்ட வியாபார இலச்சினை காரியாலயம் விண்ணப் பிக்கும் முறை சம்பந்தமான திட்டமான தகவல்களை உங்களுக்கு அளிக்கும்.

வியாபார இலச்சினை காரியாலயம்

வியாபார இலச்சினை காரியாலயத்தால் ஒரு இலச்சினையை பதிவுசெய்யும் முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும். ஆனால் ஒரே மாதிரியைப் பின்பற்றும்.

முறையான பரீட்சை - வியாபார இலச்சினை காரியாலயம், விண்ணப்பம், நிர்வாக சேவைகள், சம்பிரதாயம் உடன் இணைக் கப்பட்டதா (விண்ணத்திற்கு கட்டணம் கட்டப்பட்டதா, விண்ணப்பம் சரியான முறையில் நிரப்பப்பட்டதா) என்று பரிசீலனை செய்யும்.

உறுதியான பரிசீலனை - சில நாடுகளில் வியாபார இலச்சினை காரியாலயங்கள் உறுதியான தேவைகளுடன் விண்ணப்பங்கள் இணங்குகின்றதா என்று சரிபார்க்க விண்ணப்பங்களை பரிசீலனை செய்யும் (வியாபார சட்டத்தின்படி பதிவு செய்வதிலிருந்து தவிர்க்கப்பட்ட வகையைச் சேர்ந்ததா, இப்போதிருக்கும் இலச்சினையுடன் முரண்படுகிறதா என்று கண்டறிய)

பிரசுரிப்பும், எதிர்ப்பார்ப்பும் - பல நாடுகளில் இலச்சினை வர்த்தமான பத்திரினையில் பிரசுரிக்கப்பட்டு ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் மூன்றாம் கட்சி அதன் பதிவை எதிர்க்க அவகாசம் அளிக்கும். மற்றைய நாடுகளில் பதிவு செய்யப்பட்டவுடன் இலச்சினை பிரசுரிக்கப்படும். பதிவை ரத்துச்செய்ய விண்ணப்பம் செய்ய தொடர்ந்து காலம் கொடுக்கப்படும்.

பதிவு - மறுப்பதற்கு ஆதாரங்கள் இல்லை என்பதை அறிந்தவுடன் இலச்சினை பதிவு செய்யப்படும். இப்படி பதிவு செய்யப்பட்ட பதிவு 10 வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

புதுப்பித்தல் - புதுப்பித்தலுக்கான கட்டணத்தை செலுத்தி காலவரையின்று இலச்சினையை புதுப்பிக்கலாம். ஆனால் வியாபார இலச்சினை சட்டத்தின்படி ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பொருள் சேவைகள் உபயோகிக்கப்படா விட்டால் பதிவு முற்றாக ரத்துச்செய்யப்படும்.

ஒரு வியாபார இலச்சினையை பதிவுசெய்ய எவ்வளவு காலம் செல்லும்.

ஒரு வியாபார இலச்சினைய பதிவு செய்யும் காலம் நாட்டுக்கு நாடு வேறுபடும். மூன்று மாதத்திலிருந்து இரண்டு வருடகாலம் செல்லும். இது வியாபார இலச்சினை காரியாலயம் உறுதியான பரிசீலனை, காரியாலயம் செய்வதில் தங்கியிருக்கிறது. நேர காலத்துடன் உங்கள் இலச்சினையை பதிவு செய்ய விண்ணப்பிக்க நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள். அப்போது விளம்பரத்துக்கும், பொருட்களை சந்தைப்படுத்தவும் பதிவு கிடைக்குமானதா யிருக்கும்.

வியாபார இலச்சினை உருவாக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் உபயோகிப்பதற்கும் என்ன செலவு.

வியாபார இலச்சினை உருவாக்குவதற்கும் பதிவு செய்வதற்கும் உள்ள செலவுகளை சரியான முறையில் வரவு செலவுகளை திட்டமிடல் முக்கியமென்பதை மனதில் கொள்ள வேண்டும்.

- இலச்சினையுடன் சம்பந்தப்பட்ட logo அல்லது சொல் உருவாகுவதற்கு செலவு கள் ஏற்படும். பல நிறுவனங்கள் இந்த வேலையை Outsource பண்ணும்.
- வியாபார இலச்சினைகள் தேடுதல் நடத்துவதற்கு செலவு ஏற்படும். (கீழே பார்க்க)
- வுபதிவு செய்யும் முறைகளில் நெலவு நாடுகளின் தொகைகளிலும், பொருட்களின் வகைகளையும் பொருத்து வேறுபடும். (இலச்சினை வகைகள் 12ம் பக்கம் பார்க்க) தேசிய வியாபார இலச்சினை காரியாலயம் உங்கள் நாட்டு வியாபார இலச்சினை பதிவின் விவரமான செலரவப் பற்றி உங்களுக்கு அளிப்பர்.
- இலச்சினை பிவு செய்யும் முறைகளை பதிவு செய்ய உத்தியோக இலச்சினை முகவர்களை உபயோகிக்கும் நிறுவனங்கள் மேலதிகமான செலவுகளை எதிர்நோக்க நேரிடும். ஆனால் முக்கியமான நேரத்தையும் சக்தியையும் மிச்சப்படுத்தலாம்.

நீங்கள் தேர்ந்தெடுத்த வியாபார இலச்சினை மற்ற பதிவு செய்யப்பட்ட இலச்சினையுடன் முரண்படுமா என்பதை எப்படி கண்டறிவீர். வியாபார இலச்சினை தேடுதல் என்றால் என்ன?

வியாபார இலச்சினை பதிவு செய்ய விண்ணப்பிக்குமுன் சரியான **இலச்சினை தேடுதல்** செய்யப்பட்டதா என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். ஏனெனில் அதே போன்ற பொருளுக்கு இன்னொரு நிறுவனத்தினால் ஏற்கனவே பதிவு செய்யப்படவில்லை என்று உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேடுதல் செய்ய வேண்டும்.

நீங்களே வியாபார இலச்சினையை தேடுதல் செய்யலாம் அல்லது வியாபார இலச்சினை முகவரின் சேவையை பெறலாம். தேசிய இலச்சினை காரியாலயம் மூலமும் தேடுதல் செய்யலாம். (இலவசமாக அல்லது ஒரு கட்டணம் செலுத்த வேண்டும்) அல்லது வர்த்தக வியாபார இலச்சினை னுயவயடியளந மூலமும் செய்யலாம். எந்த முறையில் செய்தாலும் இந்த வியாபார இலச்சினை தேடுதல் ஆரம்பமான வேளை என்பதை மனதிற் கொள்ளவேண்டும். சட்டப்படி செல்லுபடியாகும். பதிவு செய்யப்பட்ட இலச்சினைகளோடு உங்களது இலச்சினை முரண்பாடாக ஒத்திருக்கிறது என்று அறிவது கஷ்டமா யிருக்கும். இதனால் அனுபவம் பெற்ற வியாபார இலச்சினை முகவர் வியாபார இலச்சினை காரியாலயம், நீதிமன்ற தீர்ப்பு போன்றவற்றில்

நல்ல பரிச்சிமுள்ளவராதலால் அவருடைய வழிகாட்டலின்படி நடப்பது உதவியாயிருக்கும். முகவரிடம் செல்லுமுன் உங்களை தேசிய வியாபார இலச்சினை காரியாலயம் (வர்த்தக database company ,லவச online வியாபார) இலச்சினை நீங்கள் உங்கள் ஆரம்ப தேடுதலை செய்ய நீங்கள் விரும்பலாம். வியாபார இலச்சினை னயவயடியளந பட்டியல் WIPO வின் இணையத்தளத்தில் கிடைக்கிறது.

ecommerce/ wipo in database trade mark. www.arbiter.wipo.int/trademark/.

வியாபார இலச்சினைகள் பொருள்கள் சேவைகள், அவைகள் பயன்படுத்தும் விதம் இனமாக வகைப்படுத்தப்படும். (சர்வதேச வகைப்படுத்தல் Annex II பார்க்க) 45 வெவ்வேறு இலச்சினை வகைகளை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள்.

நன்றாக தரப்படுத்தும் முறை

உங்களுடைய வியாபார இலச்சினை விண்ணப் பப்பத்திரத்தை நிரப்பும்போது அதிகமான நாடுகளில் நீங்கள் எந்த பொருள் சேவைகளுக்கு பதிவு செய்கிறீர்களென்று தரத்துக்கு ஏற்றமாதிரி தொகுதியாக்க வேண்டும். இலச்சினை வகைப்படுத்தலை முறையை இது காட்டும். **வியாபார இலச்சினை தரப்படுத்தல் முறை** பதிவு செய்த இலச்சினைகளை னயவய சேமித்து ஒழுங்கான முறையில் சேவைகளை பொருள்களை தரப்படுத்த அனுமதிக்கும். இலச்சினை databaseல் இருந்து தகவல்களை திரும்ப பெற இலேசாக்கிறது. உங்கள் வியாபார இலச்சினையை எல்லா தரங்களிலும் நீங்கள் உபயோகப்படுத்த எண்ணிய இலச்சினையை பதிவு செய்வது குற்றங்காணப்படுவதாயிருக்கும்.

அதிக விசாலமாக உபயோகிக்கப்படும் தரப்படுத்தல் முறை சர்வதேச வியாபார இலச்சினை தரப்படுத்தல் முறை (NICE System என்று அழைக்கப்படும். சொல் இலச்சினைகளை தரப்படுத்தல்) பொருள்களுக்கு 34 தரங்களும் சேவைகளுக்கு 11 தரங்களும் NICE தரப்படுத்தலைப் பற்றி Annex II காணலாம்.
அத்துடன் www.wipoint/classifications/ en/nice/about பார்க்கவும்.

உதாரணம்:-
பொருட்கள் எப்படி தரப்படுத்தப்படுகிறது. உதாரணம் ஒன்று எடுப்போம். உங்கள் நிறுவன கத்திகளும் முள்ளு (forics) தயாரிப்பதா யிருந்தால் உங்களுடைய இலச்சினை விண்ணப்பம் அதனுடன் ஒத்திருக்கும் பொருட்களுடன் தரம் 8 உடன் செய்யப்பட வேண்டும். மற்றும் சமையலறை உபகரண ங்களை (கொள்கலன்கள், சட்டி பானைகள்) சந்தைப்படுத்த விரும்பினால் அத்துடன் ஒத்த தரம் 21 பொருட்களுடன் இலச்சினையை பதிவு செய்ய வேண்டும். சில நாடுகளில் ஒவ்வொரு தர பொருட்களுக்கும் வெவ்வேறு விண்ணப்பம் செய்ய வேண்டும். மற்ற நாடுகளில் ஒரு விண்ணப்பத்திற்கு பல தரங்களை விண்ணப்பிக்கலாம்.



ஒரு வியாபார இலச்சினையை பதிவு செய்ய வியாபார இலச்சினை முகவர் தேவையா?

பொதுவான விதிப்படி உங்களுடைய விண்ணப்பத்தை பதிவு செய்ய அதிகமான நாடுகள் முகவர்களை அமர்த்த தேவைப் படுவதில்லை. உங்களது விண்ணப்பத்தை நீங்களே பதிவு செய்யலாம். வியாபார இலச்சினை தேடுதல் செய்வதற்கு இலச்சினை பதிவு செய்யலாம். விவரமான முறையில் பதிவு செய்வதற்கும் திறமை வாய்ந்த முகவரின் சேவை நேரத்தை மிச்சப்படுத்துவதோடு நீங்கள் சரியான முறையில் பாதுகாப்புக்கு விண்ணப்பத்திருக்கிறீரா என்பதை உறுதிப்படுத துவதோடு மறுப்புகளை தடைசெய்யவும் முடியும். நீங்கள் வெளிநாட்டில் வியாபார இலச்சினை பதிவு செய்ய விண்ணப்பி த்திருந்தால் அந்த சம்பந்தப்பட்ட நாட்டில் வியாபார இலச்சினை முகவர் அந்த நாட்டின் பிரஜையாயிருக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட வியாபார இலச்சினை காரியா லயம் உங்களுக்கு முகவர் பிரதிநிதியாக வேண்டுமென தேவைப்பட்டால் உத்தியோக பூர்வமாக அனுமதிக்கப்பட்ட வியாபார இலச்சினை முகவர்களின் பெயர் பட்டியலை தரும் (Annex I) பார்க்கவும்.

எவ்வளவு காலம் உங்களுடைய பதிவு செய்யப்பட்ட வியாபார இலச்சினை பாதுகாக்கப்படும்?

பாதுகாப்பின் காலவரையறை வேறுபட்டாலும் அதிகமான நாடுகளில் பதிவு செய்யப்பட்ட வியாபார இலச்சினை 10 வருடங்களுக்கு பாதுகாக்கப்படும். பதிவு காலவரையறையின்றி புதுப்பிக்கப்படலாம். (வழக்கமாக தொடர்ந்து 10 வருடங்களுக்கு) புதுப்பிக்கும் கட்டணம் உரிய காலத்தில் செலுத்தப்பட்டால் உங்கள் நிறுவனத்தில் ஒருவரை உரிய காலத்தில் உங்கள் வியாபாரத்தில் தொடர்ந்து அக்கறை கொண்டுள்ள நாடுகளில் பதிவுசெய்ய பொறுப்பேற்க வையுங்கள்.

இலச்சினை வடிவமைப்பினை வெளியாரிடம் கையளித்தல்

வியாபார இலச்சினையை வரைவது ஒரு உருவாக்கும் முறையாகும். அதிகமான நாடுகளில் உருவாக்குபவர் உருவாக்கும் அல்லது கலை வேலைகளுக்கு தானே பதிப்புரிமையை சொந்தமாக்கிக் கொள்ளல். ஒரு வியாபார இலச்சினையின் உருவாக்கல் ழரவ ளழரசஉந ஆகிவிட்டால் ஆனால் மூல உடன்படிக்கையில் பதிப்புரிமை உரிமையாளர் பற்றி தெளிவு அடைந்திருக்க வேண்டும். பதிப்புரிமை உங்கள் நிறுவனத்திற்கு ஒதுக்கிவைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் தாய்நாட்டின் வியாபார இலச்சினை சுவதேசத்தில் செல்லுபடியாகுமா?

வியாபார இலச்சினையால் எழும் சட்ட உரிமைகள் அந்த நாட்டின் எல்லைக்குள் வரையறுக்கப்படும். ஆதலால் செல்லுபடியாகும் உங்கள் நாட்டுக்குள்ளே வியாபார உங்களை நாட்டுக்குள்ளேயே உரிமை தரும். உங்கள் இலச்சினை பிரசித்தி பெற்றது என்று கணிக்கப்பட்டால் (இந்த தகவல்களை பிரசித்தி பெற்ற இலச்சினை 16ம் பக்கம் பார்க்க)

உங்களுடைய வியாபார இலச்சினை வெளிநாட்டில் பாதுகாக்க வேண்டும் என்று கருதுகிறீரா?

உங்கள் நாட்டில் உங்களது வியாபார இலச்சினையை பதிவு செய்யும் காரணங்களை உங்களுடைய பொருட்களை வெளிநாட்டில் சந்தைப்படுத்துவதற்கும் பொருந்தும். தற்போது ஏற்றுமதி வேலைகளில் ஈடுபட்டிருந்தால் அல்லது ஈடுபட எண்ணினால் உங்களுடைய வியாபார இலச்சினையை வெளிநாட்டில் பதிவு செய்வது புத்திசாலித்தனம். தெளிவான இலச்சினையுடன் ஏற்றுமதி செய்யும் பொருட்கள்

வெளிநாட்டு சந்தையில் அறிந்து கொள் செய்யும் உங்களுடைய நிறுவனத்துக்கு பிறநாட்டு பாவனையாளர்களிடையே நற்பெயர் கிடைத்து உங்களுடைய நிறுவனத்துக்கு நல்ல இலாபம் கிடைக்கச் செய்யும்.

உங்களுடைய வியாபார இலச்சினையை வெளிநாட்டில் எப்படி பதிவு செய்வது?

நீங்கள் உங்கள் தாய் நாட்டில், உங்களுடைய நிறுவனத்தின் வியாபார இலட்சினையை பதிவு செய்து, இப்போது வெளிநாட்டில் உங்களது வியாபார இலச்சினையை உபயோகிக்க எண்ணினால் இலச்சினையை வெளிநாட்டில் பதிவு செய்வது புத்திசாலித்தனமானது. இதற்கு மூன்று பிதான வழிகள் உள்ளன.

தேசிய வழி: பாதுகாப்பு தேடும் ஒவ்வொரு நாட்டுக்குமே உங்கள் வியாபாரம் சம்பந்தப்பட்ட விண்ணப்பத்தை தேவை படும் பாஷையை தேவைப்படும் கட்டணத்தை செலுத்தி அனுமதி பெறலாம். முறதி காட்டியப்படி அந்தநாடு உங்களுக்கு உள்ளூர்வியாபார இலச்சினை துகவரின் சேவையை உபயோகிக்க வேண்டிக்கொள்ளும்.

பிரதேச வழி: பிரதேச வியாபார இலச்சினை முறையின் அங்கத்தவர்களாயிருக்கும் நாடுகளில் நீங்கள் பாதுகாப்பு கோரி விண்ணப்பிக்க எண்ணினால் எல்லா அங்கத்துவ நாடுகளுக்கும் சம்பந்தப்பட்ட காரியாலயத்தில் விண்ணப்பத்தை நிரப்பி பதிவுசெய்ய விண்ணப்பிக்கலாம் பிரதேச வியாபார இலச்சினை காரியாலயத்தில்.

- ஆப்பிரிக்க பிரதேச கைத்தொழில் சார்ந்த உடமை காரியாலயம்
- பெனுலக்ஸ் வியாபார இலச்சினை காரியாலயம்
- ஐரோபிய சங்கத்தின் உள்ளுர் சந்தையை பொருந்த செய்யும் காரியாலயம்
- The *Organisation Africaine de la Propriété Intellectuelle.*

சர்வதேச வழி: உங்களுடைய தாய் நாடு Madrid முறையின் அங்கத்தவராக இருந்து உங்களுடைய வியாபார இலச்சினை அந்த நாட்டில பதிவு செய்யப்பட்டிருத்தல் நீங்கள் Garvid முறையை உபயோகிக்கலாம் (WIPO) 70 நாடுகளுக்கும் அதிகமாக பதிவு செய்யலாம் இந்த முறைக்கு கட்டுப்பட்ட நாடுளுக்கு.

மெட்ரிட் முறையை உபயோகிப்பதற்கான நன்மைகள்

வியாபார இலச்சினை உரிடையான இந்த முறைக்கு உடன் பட்ட எல்லா நாடுகளிலும் அலகுடைய வியாபார இலச்சினையை பதிவு செய்யலாம் அவர் நிரப்ப வேண்டியது

- தனித்த சர்வதேச விண்ணப்பம்
- ஒடு பாஷையில்
- ஒரு வகைக்கான கட்டணம ஸ்ரீ கால எல்லை

அதன் பின் சர்வதேச பதிவு நிலக்கிடப்பட்டு ஒரு தனி முறையில் புதுப்பிக்கப்படலாம்.

சர்வதேச இலச்சினை திவைப்பற்றி அதிக சர்வதேச வியாபார காரியாலயத்திலும் அல்லது றுஜீழு இனையத்தலத்திலும் பெறலாம். ஆயனசனை முறையிலுள்ள அங்கத்துவ நாகேஸின் பெயர் பட்டியல் Annex II இல் பார்க்க.

3. சின்னங்களின் வகைகள்

வியாபார இலச்சினை	திட்டமான முயற்சியின் படி உற்பத்தி செய்த பொருட்களை பிரத்தறிய இலச்சினைகள்
சேவை இலச்சினை	திட்டமிட்ட முயற்சியால் செய்யும் சேவைகளை பிரித்தறியக் கூடிய இலச்சினைகள்..
கூட்டு இலச்சினை	ஒரு சங்கத்தின் அங்கத்தவர்களால் அளித்த அல்லது தயாரித்தப் பொருள் அல்லது சேவைகளை பிரித்தறிந்து காட்டும் இலச்சினை
அத்தாட்சி பத்திர இலச்சினை	திட்டமிட்ட் தரததின படி இணைங்கும் பொழுள்கள் அல்லது சேவைகளை அத்தாட்சிபடுத்தும் நிர்வாகத்தால் அத்தாட்சிப் படுத்தப்பட்டுள்ள பொருள் சேவைகளின் இலச்சினை
பிறசித்திப்பெற்ற இலச்சினை	பலத்த பாதுகாப்பின் பயனால் சந்தையில் பிரசித்தி பெற்ற இலச்சினை.

சேவை இலச்சினை என்பது என்ன?

சேவை இலச்சினையானது தன்மையில் வியாபார இலச்சினையை ஒத்து இருக்கிறது. இரண்டும் தெளிவான அடையாளங்கள் வியாபார இலச்சினைகள் ஒரு ஸ்தாபனத்தின் பொருட்களை மற்றதிலிருந்து வேறுப்படுத்தி காட்டும் அதேபோல் சேவை இலச்சினை களும் வேசை சம்பந்தப்பட்ட வேலைகளை நிறைவேற்று சேவை எந்த வகையிலும் அடங்கும், நிதி, வங்கிமறை, பிரயானம், விளம்பரம், உணவளித்தல், போன்றவை. வியாபார இலச்சினையைப் போல் சேவை இலச்சினைகளையும் பதிவு செய்ய, புதுப்பிக்க, ரத்து செய்ய பிறருக்கு உரிமையாக்க, அனுமதி பெற முடியும்.

உதாரணம். Nat West



Courtesy: National Westminster Bank Plc

கூட்டுறவு இலச்சினை என்பது என்ன?

ஒரு சங்கத்தால் அல்லது கூட்டுறவு இதன் அங்கத்தவர்கள் தங்கள் பொருட்களை சந்தை படுத்த **கூட்டுறவு இலச்சினையை** உபயோகிப்பர். இந்த சங்கம் கூட்டுறவு இலச்சினையை ஊபயோகிக்க ஒரு அளவு கோள் அமைப்பர். (உதாரனம்: தரம்) தனிப்பட்ட நிறுவனங்களுக்கு நல்ல தரத்தோடு ஒத்து போனால் இந்த இலச்சினையை உபபோகிக்க அனுமதி அளிப்பர். கூட்டாக சேர்ந்து ஒரு குழுவின் ஸ்தானங்களின்

பொருட்களை சந்தைப்படுத்த இது தான் சரியான முறை. ஏனெனில் தனி இலச்சினை பாவனையாளர்களால் அடையாளங்கான முடியாது. பிரதான விநியோகஸ்தர்களால் ஏற்றுக்கொள்ள கஷ்டமாயிருக்ககும்.

உதாரனமாக Melina கூட்டுறவு இலச்சினை Valle Di Non and Valle de Sole (Italy) Helimade Consortium (1989) உள்ளடங்கும் கூட்டுறவு களில் 5200 அங்கத்தவர்களாக Melind கூட்டுறவு இலச்சினை உபயோகிக்கப் படுகிறது.

Courtesy: Melinda Consortium



அத்தாட்சிபத்திர இலச்சினை என்றால் என்ன?

வரையறுக்கப்பட்ட தரத்துடன் இனங்கும் பொருளுக்கு **அத்தாட்சி இலச்சினை** கொடுக்கப்படும். ஆணால் ஒரு அங்கத்துவத்துக்கும் மட்டுப்படுத்தப்படவில்லை நல்ல தரத்துடைய பொருள் தாயரிக்கும் யாராலும் அவை உபயோகிக்கப்படலாம் அதிகமான நாடுகளில் கூட்டுறவு இலச்சினைகும் அத்தாட்சிக்கும் உள்ள வேறுபாடு என்ன வெனில் முன்னையது ஒரு குறிப்பிட்ட ஸ்தாபனத்துக்காக உபயோகிக்கப்படும். உதாரணமாக ஒரு சங்கத்தின் ஆனாலும் அத்தாட்சி இலச்சினையின் உரிமையாளர்கள் வரையறுக்கப்பட்ட தரத்துடன் இணங்கும் யாராலும் அத்தாட்சி இலச்சினை உபயோகிக ப்படலாம். அத்தாட்சி இலச்சினைக்கு தேவையானது என்ன பதிவுக்கு வேண்டிய பண்பு சம்பந்தப்பட்ட பொருளுக்கு அத்தாட்சிக்கு தகுதி என்பதாகும்

உதாரணம் Woole Mark அடையாளம் பதிவு செய்யப்பட்ட றுழழட ஆயசம நிறுவனத்தின் அத்தாட்சி குறி Wool ஆயசம தரத்தை உறுதிசெய்யும் அடையாலம் இதனால் செய்யும் பொருட்கள் 100மூ புதிய கம்பனி இது பிரத்தியோக Wool ஆயசம நிறுவனத்தை கணடிப்பாக பிரத்தியோகமாக செய்வதுடன் இணங்கும் இது 140க்கும் அதிகமான நாடுகளின் பதிவு செய்யப்பட்டு தரத்தை எதிர்நோக்கும் 67 நாடுகளுக்கு பதிவு அளித்திருக்கிறது.



Courtesy: The Woolmark Company

பிரசித்தி பெற்ற இலச்சினை என்றால் எவை?

இலச்சினையை கோரும் நாடுகளுக்கு தகுதியான நிர்வாகத்தால் **பிரசித்தி பெற்ற இலச்சினை** என்று கருதப்படும் இலச்சினை தான் பிரசித்தி பெற்ற இலச்சினை. பிரசித்தி பெற்ற இலச்சினை .சட்டரீதியான பாதுகாப்பால் நன்மை பெறுகின்றது உதாரணமாக பிரசித்தி பெற்ற இலச்சினைகளை ஒரு தேசத்தில் அவை

பதியப்படாவிட்டாலும் பாதுகாக்கப்படுகிறது அதே போன்ற பொருட்களுக்கு முரன்பாடான இலச்சினைகளுக்கு எதிராக பொதுவாக பாதுகாக்கப்பட்டால் பிரசித்தி பெற்ற இலச்சினை அதே போன்றல்லாத பொருட்களுக்கும் பாதுகாப்பளிக்கும் சில நிபந்தனைகளை எதிர்நோக்க வேண்டும். இந்த பலத்த பாதுகாப்பு ஏனெனில் ஒரு பிரசித்தி பெற்ற இலச்சினையை நிறுவனங்கள் ஏமாற்றுவதையும் அதன் கீர்த்திக்கும், நற்பெயருக்கும் பங்கம் விளைவதை தவிர்ப்பதற்காகவும்.

உதாரணம்: மென்பாணத்துக்கு Wonder Cola ஒரு பிரசித்தி பெற்ற வியாபார இலச்சினை என்று பாவனை செய்வோம் Wonder Cola சுயமாகவே பாதுகாப்பு பெற்று நன்மை பெறும் இந்த நாடுகளில் இந்த இலச்சினை மென்பானத்துக்கு பிரசித்தி பெற்றிருத்தல் சம்பந்தப்படாது. பொருட்களுக்கும் சேவைகளுக்கும் இந்த பாதுகாப்பு கிடைக்கும் இன்னொரு நிறுவனம் டி-சர்ட், மூக்கு கண்ணாடி (Sunglasses) போன்ற வற்றை Wonder Cola Inc இருந்து அதிகாரம் பெற வேண்டும். இல்லாவிட்டால் வியாபார இலச்சினை உரிமை ஒப்பந்தத்தை மீறியதற்கு வழக்காட நேரிடும்.

4. வியாபார இலச்சினை உபயோகித்தல்

வியாபார இலச்சினை உபயோகிக்காமல் ஒரு வியாபார இலச்சினை பதிவு செய்யலாமா?

